SEITHI ONLINE, MONDAY, 1 JUNE 2020




# NTU, Facebook இணைந்து அறிமுகம் செய்யும் 9 மாத முன்னோடித் திட்டம்

1/6/2020 16:45

A A+

நன்யாங் தொழில்நுட்பப் பல்கலைக்கழகமும் (NTU), Facebook நிறுவனமும் இணைந்து 9 மாத முன்னோடித் திட்டம் ஒன்றை அறிமுகம் செய்யவிருக்கின்றன.

அதன்கீழ், உள்ளூர்த் தகவல் நிலையத் திறனாளர்களை உருவாக்கும் புதிய பாடத் திட்டங்கள் வழங்கப்படும்.

ஆகஸ்ட் மாதம் தொடங்கும் அந்தத் திட்டம், வடிவமைப்புப் பொறியியல், கட்டமைப்புப் பொறியியல், தளச் செயல்பாடு, வசதிச் செயல்பாடு ஆகிய துறைகளில், நான்கு நிபுணத்துவச் சான்றிதழ்களை வழங்கும்.

மேலும் அனைத்துலகக் கட்டுமான நிர்வாகத்தில் பட்டக் கல்விச் சான்றிதழும் வழங்கப்படும் என்று பல்கலைக்கழகமும் Facebook நிறுவனமும் இன்று வெளியிட்ட அறிக்கை குறிப்பிட்டது.

பயிற்சித் திட்டம் அனைவருக்கும் பொதுவானது.

SkillsFuture சிங்கப்பூர் அமைப்பிலிருந்து மானியம் பெற, அந்தப் பயிற்சித் திட்டம் அங்கீகாரம் பெற்றுள்ளது.

2018ஆம் ஆண்டில் Facebook நிறுவனம் 1.4 பில்லியன் வெள்ளி மதிப்பிலான, ஆசியாவின் முதல் தகவல் நிலையத்தைச் சிங்கப்பூரில் கட்டவிருப்பதாக அறிவித்திருந்தது.

அதன் செயல்பாடுகள் 2022ஆம் ஆண்டு தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.